# சேலத்தில் புதிய வரலாறு படைத்திட்ட கழக இளைஞர் அணி

# 2 - வது மாநில மாநாடு எழுச்சிமிகு காட்சிகள் காணீர்!





சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டுத் திடலில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.








கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், கழகக் கொடியை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ஏற்றி வைத்தார். மாநாட்டினை மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.